சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு:

கொடைக்கானலில் அரசு நிலத்தை அபகரித்த முதலமைச்சர் விஜய்!

சென்னை, அக்.8 -

கொடைக்கானலில் அரசு நிலத்தை முதலமைச்சர் விஜய் அபகரித்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்துள்ள வேட்புமனு மற்றும் சொத்து விவரப் படிவத்தில் முரண்பாடுகள் இருப்பதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது.

சென்னை பாடியில் 35 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு சொத்தை, இன்னும் தமக்குச் சொந்தமான 7 கோடி மதிப்புள்ள சொத்து என தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் தவறாகக் குறிப்பிட் டுள்ளார்.

கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் 50 சென்ட் விவசாய நிலங்கள் இருப்பதாக, தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் குறிப்பிட்ட நிலம், அரசுக்கு சொந்தமானது என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட் டுள்ள பல அசையாச் சொத்துக்கள் குறித்துத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது தாகவும், தவறாக குறிப்பிடப் பட்டுள்ளதாகவும், இதனால் சென்னை பெரம்பூர் தொகுதியில் முதலமைச்சர் விஜய் பெற்ற வெற்றியை செல்லாது என அறிவிக்க மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி, அதே தொகுதியைச் சேர்ந்த எஸ்.தினேஷ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தேர்தல் வேட்புமனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் (Form 26), முதல்வர் விஜய் தனது அசையா சொத்துக்கள் குறித்த விவரங்களை முழுமையாகவும் சரியாகவும் தெரிவிக்கவில்லை. தகவல்களை மறைத்துள்ளார் என்பதே மனுதாரரின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

சென்னை போரூரில் ரூ.9.13 கோடிக்கு 33,955 சதுர அடி விவசாயம் அல்லாத நிலத்தை 2010ல் வாங்கியதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் பதிவுத்துறை ஆவணங்களின்படி, அவர் ரூ.7.5 கோடிக்கு 20,773 சதுர அடி நிலத்தை மட்டுமே வாங்கியுள்ளார். நிலத்தின் பரப்பளவு மற்றும் விலையில் ஏன் இந்த கூடுதல் தகவல் குறிப்பிடப்பட்டது என்பதற்கு விளக்கம் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால், அந்த 23,460 சதுர அடி வணிகக் கட்டடத்தை வேட்புமனுதாக்கல் செய்வதற்கு முன்பே, 2026 பிப்ரவரி 12 அன்றே ரூ.35 கோடிக்கு விற்று விட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இக்கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கொரட்டூர் நிலத்திற்குப் பதிலாக பரிமாற்றப் பத்திரம் மூலம் பெறப்பட்டது. இது நேரடி கொள்முதல் அல்ல என்ற விவரமும் மறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

நீலாங்கரை பங்களாவை பரம்பரைச் சொத்து எனக் குறிப்பிட்டு ள்ளார். ஆனால், அது பரம்பரைச் சொத்து அல்ல; அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் 2003ல் வேறொருவரிடம் இருந்து வாங்கி, 2005ல் தனது மகனுக்கு அன்பளிப்பாக (Settlement Deed) எழுதிக் கொடுத்த சொத்து. இதில் கட்டடப் பரப்பளவு மற்றும் சந்தை மதிப்பில் முரண்பாடு கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கோவை அரசு மருத்துவமனை மாத்திரை கவரில் இந்தி மொழி!

கோவை, அக்.8-

கோவை அரசு மருத்துவமனையில் வழங்கப் பட்ட மாத்திரை கவரில் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றுடன் இந்தி மொழியும் இருந்ததாக சர்ச்சை எழுந்துள்ளது.

கோவை அரசு மருத்துவமனைக்கு கோவை மட்டுமின்றி திருப்பூர், ஈரோடு, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான நோயாளிகள் தினமும் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளி களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, மருத்துவர்களின் பரிந்துரைப்படி பல்வேறு வகையான மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்காக, மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் மாத்திரை கவர்களில் காலை, மதியம், மாலை, இரவு என மாத்திரை பயன்படுத்தும் முறை உள்ளிட்ட விவரங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுவது வழக்கம். இந்நிலையில், சமீபத்தில் கோவை அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட மாத்திரை கவர்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுடன் இந்தி மொழியிலும் வாசகங்கள் இடம்பெற்றிருந்தது.

இதனை கவனித்த நோயாளிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் வழங்கப்படும்

மாத்திரை கவரில் இந்தி மொழி இடம்பெற்றிருப்பது ஏன்? என கேள்வி எழுப்பினர். மேலும் தமிழகத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நடைமுறையில் உள்ள நிலையில், மூன்றாவது மொழியாக



இந்தி மொழி திணிக்கப்படுவதாகவும் சிலர் குற்றம்சாட்டினர்.

மேலும், கோவை அரசு மருத்துவமனையில் இந்தி மொழியுடன் வழங்கப்பட்ட மாத்திரை கவர்கள், புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த விவகாரம் மருத்துவமனை நிர்வாகத்தின் கவனத்திற்கு சென்ற நிலையில், மருத்துவமனை டீன் உத்தரவின் பேரில் நேற்றிரவு இந்தி மொழி இடம்பெற்றிருந்த மாத்திரை கவர்கள் மாற்றப்பட்டன.

பின்னர், இந்தி மொழி இல்லாத புதிய மாத்திரை கவர்களில் நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது. இந்த சம்பவம் அரசு மருத்துவமனை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், மாத்திரை கவர்களில் எந்த மொழிகளில் விவரங்கள் இடம்பெற வேண்டும், அவை எந்த அடிப்படையில் அச்சிடப் பட்டன, மருத்துவமனை நிர்வாகத்தின் அனுமதியுடன் தான் இந்த கவர்கள் பயன்படுத்தப்பட்டன வா? என்பது உள்ளிட்ட கேள்விகளும் எழுந்துள்ளன.

மேலும், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் பொருட்களில் தமிழகத்தின் மொழிக் கொள்கை மற்றும் நோயாளிகளின் புரிதலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், இந்தி இடம் பெற்ற மாத்திரை கவர்கள் எவ்வளவு காலமாக பயன்படுத்தப்பட்டன? அவை எங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டன? எத்தனை கவர்கள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன? தற்போது அவை முழுமையாக திரும்பப் பெறப்பட்டுள்ளனவா? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. கோவை அரசு மருத்துவமனைகளில் வட மாநிலத்தை சேர்ந்த பலரும் சிகிச்சை பெற வருவதால் அவர்களுக்கு புரியும் வகையில் இந்தி வாசகம் இடம் பெற்று இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக மருத்துவமனை டீன் தொடர்பு கொண்ட போது அவர் பிறகு பேசுவதாக கூறி, கவர்கள் சர்ச்சை குறித்து பேச மறுத்துவிட்டார்.

இது குறித்து மருத்துவமனையின் ஆர்.எம்.ஓ சரவணபிரியா கூறுகையில், "மாத்திரை கவர் குறித்த சர்ச்சை எழுந்தவுடன் டீன் உத்தரவின் பேரில் மாத்திரை கவர்கள் உடனடியாக மாற்றப்பட்டது. ஆனால், டெண்டர் அடிப்படையில் கவர்கள் சிந்தாமணியிடம் இருந்து தான் பெறப்பட்டு வருகிறது.

இப்போது இந்த சர்ச்சை எழுந்துள்ளது" என்றார்.

பொதுமக்கள் அவதி!

தமிழ்நாட்டில் அரிசி - மளிகைப் பொருட்கள் விலை கடும் உயர்வு!

த.வெ.க. ஆட்சி நடவடிக்கை எடுக்காமல் மௌனம்!

சென்னை, அக்.8 -

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்களின் விலை கிடு கிடுவென உயர்ந்து வருவதால் பொது மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்தது முதல் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அரிசி விலை கடந்த 4 மாதங்களில் 4வது முறையாக உயர்ந்துள்ளது, அரிசி மூட்டை ஒன்றுக்கு 300 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

உதாரணமாக ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட டீலக்ஸ் பொன்னி அரிசி தற்போது ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பொன்னி அரிசி, தற்போது ஆயிரத்து 950 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரத்து 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட வெள்ளை பொன்னி அரிசி தற்போது 2 ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட இட்லி அரிசி தற்போது ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சரிசி தற்போது ஆயிரத்து 800 ரூபாய்க்கும், 25 கிலோ எடை கொண்ட சிவாஜி பொன்னி அரிசி ஆயிரத்து 800 ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி ஆலைகளில் நெல் கையிருப்பு குறைந்துள்ளதால், அரிசி விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. தீப ஒளி பண்டிகைக்கு முன் ஒரு கிலோ அரிசி நூறு ரூபாயை தாண்டும் என்பதால் பொதுமக்கள் அதிர்ச்சிய டைந்துள்ளனர்.

இதேபோல், மளிகைப் பொருட்களின் விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெய் விலை லிட்டருக்கு 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

பருப்பு வகைகளின் விலை கிலோவுக்கு 10 ரூபாயும், சீரகம் விலை கிலோவுக்கு 50 ரூபாயும் அதிகரித்துள்ளது.

மளிகைப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது பொது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அரிசி, மளிகைப் பொருட்கள் மட்டுமின்றி காய்கறி விலையும் அதிகரித்து வருகிறது. விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் தவெக அரசு தூங்கிக் கொண்டிருக்கிறதா என மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

சென்னையில் 9 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த மின்வெட்டு!

ஆத்திரமடைந்த மக்கள் நெடுஞ்சாலையில் சாலை மறியல்!

சென்னை, அக். 8-

சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரவு நேர மின் வெட்டு தொடர்ந்ததால், ஆத்திரமடைந்த மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சென்னை ஆர்.கே நகர் தொகுதிக்கு உட்பட்ட புச் சம்மாள் தெரு பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் மதியம் ஒரு மணி அளவில் மின் வெட்டு ஏற்பட்ட தாக கூறப்படுகிறது. 9 மணி நேரம் கடந்தும் மின்சாரம் வராத நிலையில், ஆத்திரமடைந்த அந்த பகுதி மக்கள், நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

த.வெ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பிய அவர்கள், மின்வாரிய அதிகாரிகளை செல்போன் வாயிலாக அழைத்தாலும் அவர்கள் அழைப்பை எடுப்பதில்லை என குற்றம்சாட்டி னர். கழிவு நீருடன் சேர்ந்து குடிநீர் வரும் நிலையில், அதனோடு தாங்கள் வாழப் பழகி விட்டதாகவும், தற்போது மின்வெட்டு கூட வும் வாழ பழகிக்கொள்ள அரசு தங்களை நிர்ப்பந்திக்கி றதா என்றும் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

திருவள்ளூர்!

இதேபோல், திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை அடுத்த பள்ளிப்பட்டு அருகே நெடியம் சுற்று வட்டார பகுதியில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக மின் வெட்டு ஏற்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர்.

சேலம்!

சேலத்தின் பல்வேறு பகுதிகளில் நாள்தோறும் 4 தடவைக்கும் மேலாக மின் வெட்டு ஏற்படுவதால் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே முத்துநாயக்கன்பட்டி மின்சார வாரிய பிரிவுக்கு உட்பட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் கடந்த 3 மாதங்களாக தினமும் 4 மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுகிறது. காலை மற்றும் இரவு நேரங்களில் தொடரும் மின்வெட்டால், பொதுத்தேர்வுக்கு படிக்கும் மாணவ, மாணவிகள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மின்வாரிய அதிகாரிகளிடம் னபலமுறை புகார் அளித்தும் அலட்சியப்படுத்துவதாக வேலகவுண்டன்புதூர் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கொடைக்கானலில் அரசு நிலத்தை அபகரித்த முதலமைச்சர் விஜய்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

கொடைக்கானல், அக். 8-

கொடைக்கானலில் அரசு நிலத்தை முதலமைச்சர் விஜய் அபகரித்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்துள்ள வேட்புமனு மற்றும் சொத்து விவரப் படிவத்தில் முரண்பாடுகள் இருப்பதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சென்னை பாடியில் 35 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு சொத்தை, இன்னும் தமக்குச் சொந்தமான 7 கோடி மதிப்புள்ள சொத்து என தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். அவரது நீலாங்கரை பங்களாவை பரம்பரைச் சொத்து என்றும் தவறாகக் காட்டியுள்ளார் என்றும் புகார் கூறப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் 50 சென்ட் விவசாய நிலங்கள் இருப்பதாக, தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் குறிப்பிட்ட நிலம், அரசுக்கு சொந்தமானது என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல அசையாச் சொத்துக்கள் குறித்துத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாகவும், தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதனால் சென்னை பெரம்பூர் தொகுதியில் முதலமைச்சர் விஜய் பெற்ற வெற்றியை செல்லாது என அறிவிக்க மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பூவிருந்தவல்லி – வடபழனி இடையே

முதற்கட்டமாக 15 மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்!

மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல்!

சென்னை, அக். 8-

பூந்தமல்லி - வடபழனி இடையே முதற்கட்டமாக 15 மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முந்தைய திமுக ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்ட பூந்தமல்லி - வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் வழித்தடம், வரும் 11ஆம் தேதி முதல் தனது சேவையை தொடங்கவுள்ளது.

இந்நிலையில், இந்த வழித்தடத்தில், முதல் கட்டமாக 15 ரெயில்கள் இயக்கப்படும் என்றும், ஒவ்வொரு மெட்ரோ ரயிலும் மூன்று பெட்டிகளை கொண்டதாக இருக்கும் என்றும் மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2-வது கட்டத்தில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்கள் அனைத்தும் ஓட்டுநர் இல்லாமல் தானாக இயங்க கூடிய வகையில் நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இருப்பினும், ஆரம்ப கட்டத்தில் மெட்ரோ ரயில்கள் ஓட்டுநருடன் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மெட்ரோ ரயிலில் அதிகபட்சமாக 900 பேர் பயணம் செய்ய முடியும். ஆரம்பத்தில் 10 நிமிடே இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். பயணிகள் கூட்டம் அதிகரிக்கும் பட்சத்தில் இந்த இடைவெளி குறைக்கப்பட்டு சேவை அதிகரிக்கப்படும். தானியங்கி ரயில் கட்டுப்பாடு மற்றும் தானியங்கி ரயில் பாதுகாப்பு முறை புதிய மெட்ரோ ரயில்களில் உள்ளன. மேலும் நவீன தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் கட்டுப்படு அமைப்புகள் உள்ளன. சிக்னல் சிஸ்டம் நவீன தொழில்நுட்பத்தில் கையாளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை காந்தி அருங்காட்சியகம்

பார்வையிட கட்டணம் ரூ.20 நிர்ணயம்! மக்கள் எதிர்ப்பு!

மதுரை, அக். 9-

மதுரையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க காந்தி நினைவு அருங்காட்சியகம், பல ஆண்டுகளாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இலவசமாகப் பார்வையிடும் இடமாகவே இருந்து வந்தது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது நினைவுகளை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கில், இங்கு எப்போதுமே நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டதில்லை.

சமீபத்தில் சுமார் ரூ. 10.25 கோடி அரசு நிதியில் புதுப்பிக்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப் பட்டது. ஆனால், திறக்கப்பட்ட சில நாட்களிலேயே இங்கு வருபவர்களிடம் நுழைவுக் கட்டணமாக ரூ. 20 வசூலிக்கப்படுவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. இதற்கு எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

தேசப்பிதா காந்தியடிகளின் வரலாற்றுச் சுவடுகளை உள்ளூர் மக்களும், வெளியூர் மற்றும் வெளி நாட்டுப் பயணிகளும் தடையின்றிப் பார்த்துச் செல்ல வேண்டும் என்பதே இந்த அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கம். ஆனால் தற்போது வசூலிக்கப்படும் இந்த 20 ரூபாய் கட்டணம் எளிய மற்றும் ஏழை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குடும்பத்தோடு ஆசையாக அருங்காட்சியகத்தைக் காண வரும் அடித்தட்டு மக்கள், கையில் பணமில்லாமல் வாசலிலேயே நின்று ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கவிஞர் இரா. இரவி உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "பல தலைமுறைகளாக இலவசமாக இருந்த ஒரு வரலாற்று நினைவிடத்தில் திடீரெனக் கட்டணம் வசூலிப்பது ஏற்புடையதல்ல. இது ஏழை எளிய மக்களின் வரலாற்று அறிவைப் பறிக்கும் செயல். எனவே அரசு உடனடியாகத் தலையிட்டு, பழையபடி முழுமையான இலவச அனுமதியை வழங்க உத்தரவிட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில்

மிக மோசமான நிலையில் அம்மா உணவகங்கள்!

சென்னை, அக். 8-

சென்னையில் இயங்கும் அம்மா உணவகங்களில், போதிய பராமரிப்பின்றி, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

திமுக ஆட்சிக் காலத்தில், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அம்மா உணவகம் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்கும் அதன் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங்கள் தீட்டி நிதி ஒதுக்கீடு செய்தார். அம்மா உணவகங்களை நடத்தி வரும் சுயஉதவிக் குழு பெண் பணியாளர்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் வகையில், அவர்களின் தினசரி ஊதியம் 300 ரூபாயிலிருந்து 325 ரூபாயாக திமுக ஆட்சிக்காலத்தில் உயர்த்தப்பட்டது.

ஆனால் தற்போதுள்ள த.வெ.க. ஆட்சியில் அம்மா உணவகங்களின் செயல்பாடு மிகவும் மோசமாக உள்ளது. சென்னை மாநகரில் உள்ள383 அம்மா உணவகங்களில், பல்வேறு உணவகங்கள் பராமரிப்பின்றி சேதமடைந்து மிக மோசமான நிலையில் செயல்பட்டு வருகின்றன. கீழ்பாக்கத்தில் உள்ள அம்மா உணவகத்தில் முறையான குடிநீர் வசதி இல்லை, சமையலறையில் மின்விசிறிகள் செயல்படாமல் உள்ளதாக பணியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் அம்மா உணவகங்களில் அதிகமான எலி தொல்லை இருப்பதாகவும், இதனால் சுகாதார சீர்கேடு நிலவ வாய்ப்புள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.